**தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2021 நவம்பர் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல்களின் இலக்கம் 2021/03 கொண்ட | | |
| (அ) 3.2 பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கைகள் இறுதி திறைசேரி கணக்குக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வருமானங்கள், செலவினங்கள் மற்றும் பிரதான பேரேட்டு மீதிகளுடன் இணங்குவதாக சான்றுப்படுத்தப்பட வேண்டும். அதற்கு முரணாக திறைசேரி கூற்றுக்களின் படி முற்பண பெறுவனவுகள் ரூபா 54,462,979 ஆயினும் முற்பண பெறுவனவுகளாக ஏனைய தலைப்புக்களினால் முற்பண பீ கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட ரூபா 2,083,734 பெறுமதியினை கவனத்தில் கொள்ளாது ரூபா 52,379,245 மாத்திரம் நிதிச்செயலாற்றல் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்றினுள் இடப்படுவது CIGAS டெக்ஸ்டொப் குறியின் மூலம் உருவாக்கப்பட்ட பரீட்சை மீதியில் உட்பட்டிருக்கும் தரகுகள் ஆவணத்துடன் அதன் பிரகாரம் முற்பண பெறுவனவுகளான ரூபா 52,379,245 நிதிச் செயால்றற்ல் கூற்றில் உட்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 7.2 ஆம் பந்தியின் பிரகாரம், கணக்கீட்டு உத்தியோகத்தர் சார்பாக அறிக்கையிடல் நிலையத்தினால் சேகரிக்கப்பட்ட ஏனைய வருமானங்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட வேண்டாதுள்ளதுடன் அவ்வருமானத்தினை கட்டுநிதி இணக்கக்கூற்றில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். அவ்வாறு இருப்பினும் திணைக்களத்தினால் கணக்கீட்டு உத்தியோகத்தர் சார்பில் சேகரிக்கப்பட்ட ரூபா 77,714,535 ஆன ஏனைய வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்தது. | நிதிச்செயலாற்றல் கூற்றில் ஏனைய வருமானங்களாக ரூபா 77,714,535 தொகையினை உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - |
| (ii) | 2020 வருடத்திற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு பெறுவனவுகளாக ரூபா 958,895,389 குறிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறானதொரு பெறுவனவினை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. | நிதிச் செயலாற்றல் கூற்றில் 2020 வருடத்திற்கான ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்கு பெறுவனவுகளாக காட்டப்பட்டுள்ள பெறுமானம் அச்சுப் பிழையாவதுடன் அதனை திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 2020 வருடத்திற்கான ஒப்பீட்டு பெறுமானங்களினை சரியாக காட்டப்படல் வேண்டும். |

**(ஆ) மூலதன செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எதிர்கால சேவைகளினை நிறைவேற்றுவதற்கான பங்களிப்பினை எதிர்பார்க்கப்பட்டு வளங்களுக்காக மேற்கொள்ளப்படும் காசுப்பாய்ச்சல் அளவு முதலீட்டு செயற்பாடுகளினால் உருவாகும் காசு பாய்ச்சல் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதினால் | மூலதன சொத்துக்கள், மறுவாழ்வு மேம்படுத்தல், திறன் அபிவிருத்தி மற்றும் ஏனைய மூலதன செலவினங்கள் எதிர்கால சேவைகளினை நிறைவேற்றும் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளும் தேவைப்பாடாக | காசுப்பாய்ச்சல் கூற்றினுள் முதலீட்டு செயற்பாடு களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட காசுப்பாய்ச்சலினை சரியாக |

| | | |
|---|---|---|
| அக்காசு பாய்ச்சலினை தனியாக வெளிக்காட்டப்படல் வேண்டும். அவ்வாறாயினும் நிதிக்கூற்றுக்களின் படி மூலதன சொத்துக்கள் மறுவாழ்வு மேம்படுத்தல், திறன் அபிவிருத்தி மற்றும் ஏனைய மூலதன செலவினங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 179,508,496 தொகையினை செயற்பாட்டு அலுவல்களின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பெறுமானத்தினை முதலீட்டு செயற்பாடாக காட்டப்பட்டிருந்தது. | இருப்பதால் அச்செலவினங்கள் மூலதன செயற்பாடுகளாக காட்டப்பட்டுள்ளன. | இனங்காணப்படல் வேண்டும். |

**(இ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய இலக்கம் 2021/03 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள், காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு அலுவல்களிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக காட்டப்படல் வேண்டும். அவ்வாறாயினும் பொது வைப்புக் கணக்காக காட்டப்பட்டுள்ள வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள் முறையே ரூபா 367,453,577 மற்றும் ரூபா 1,356,488,482 நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் வனசீவராசிகள் மற்றும் தாவர கட்டளைச் சட்டத்தின் படி பேணிச் செல்லப்படும் கணக்காக இருப்பதால் அதன் கீழுள்ள கொடுக்கல் வாங்கல்கள் நிதிச் செயற்பாடாக காட்டப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி பிரகாரம் செயற்படல் வேண்டும். |

**(ஈ) முற்பண கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய இலக்கம் 2021/03 கொண்ட பொதுக் கணக்குகள் வழிகாட்டியின் 3.2 ஆம் பந்தியின் | நிதிச்செயலாற்றல் கூற்று திணைக்கள தரகுகளின் அடிப்படையாகக் கொண்டு தயாரித்துள்ளதுடன் திறைசேரி கணக்குகளின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | |
|---|---|
| பிரகாரம் அறிக்கையிடல் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கை இறுதி திறைசேரி கணக்குகள் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வருமானங்கள், செலவினங்கள் மற்றும் பிரதான பேரேட்டு மீதிகளுடன் இணங்குவதாக சான்றுப்படுத்த வேண்டியிருந்த போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றில் 2020 வருடத்திற்கான ஒப்பீட்டு எண்ணிக்கைகளினை உட்படுத்தும் போது திறைசேரிக் கணக்கு கூற்றின் படி முற்பண பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள் முறையே ரூபா 39,534,166 மற்றும் ரூபா 55,690,601 ஆன போதிலும் நிதிச் செயலாற்றல் கூற்றின் படி முறையே ரூபா 36,205,110 மற்றும் ரூபா 55.104,615 ஆனபடியால் முறையேரூபா 3,329,056 மற்றும் 585,986 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. | பிரகாரமான பெறுமானங்கள் கட்டுநிதி இணக்கக் கூற்றின் மூலம் சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

**(உ) கட்டுநிதி இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 26 ஆந் திகதிய இலக்கம் 2021/03 கொண்ட பொதுக் கணக்குகள் வழிகாட்டலின் 7.5 பந்தியின் படி 2021 நவம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக நிதிச் செயலாற்றல் கூற்றின் மீதி, கட்டுநிதி இணக்கக் கூற்றின் படி மீதியின் மற்றும் வருட இறுதியின் கட்டுநிதி மீதியின் கூட்டு எண்ணிக்கைக்கு சமமாக இருத்தல் வேண்டும். 2020 வருடத்திற்கான ஒப்பீட்டு எண்ணிக்கைகள் அதன்படி காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் கட்டுநிதி இணக்கக் கூற்றில் 2020 வருடத்திற்கான ஒப்பீட்டு எண்ணிக்கைகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 வருடத்திற்கான ஒப்பீட்டு தரவுகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**(ஊ) ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மின் உபகரணங்களுக்கான அட்டவணை | | |
| நிதிப்பிரமாணம் 454(2) படி மின் உபகரணங்களுக்கான அட்டவணை பேணப்பட்டிருக்க வில்லை. | பிரதான காரியாலயம் மற்றும் கள காரியாலயங்களில் பேணப்பட்டு வரும் மின்சார உபகரண அட்டவணை இதனகத்திற்குப் பின்னர் ஒவ்வொரு காரியாலயங்களிலும் பேணப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் திணைக்களத்தினால் 2021 வருடத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 11 செலவின விடயங்களில் நூற்றுக்கு 30 முதல் நூற்றுக்கு 100 வீத வரையிலான வீச்சில் சேமிப்பு அவதானிக்கப்பட்டது. | Covid 19 தொற்று,சீரற்ற காலநிலை மற்றும் மூலப்பொருட்களின் விலையேற்றம், அமைச்சரவை செயலாளரின் இலக்கம் 21/1596/304/134 மற்றும் 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய பத்திரப்படி ஒதுக்கீடுகள் நிறுத்தி வைக்கப்பட்டமை இதற்கான காரணிகள் ஆகும். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் முறையான திட்டம் மற்றும் முகாமைத்துவத்தின் படி மதிப்பீடுகள் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகள் | 1,127,483 | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இறந்து போன, ஓய்வு பெற்ற, சேவையினை விட்டுச் சென்ற மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்ட 26 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 வருடங்கள் விஞ்சி விட்ட ரூபா 1,127,483 கடன் நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சேவையினை இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஏனைய உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் படி தேர்த்தல்கள் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் படி கடன் நிலுவைகளினை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தாபனக் கோவை ஏற்பாடு களுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |
| (ii) XLVIII ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பந்தி | | கடமையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர் களினால் நேரும் சகல விதமான ஒழுக்காற்றுக்கு முரணான செயல்கள் அல்லது கவனக் குறைவினால் ஏற்படும் தவறுகள் சம்பந்தமாக இயன்றளவு துரிதமாக ஒதுக்காற்று நடவடிக்கைக்கான அதிகாரமளிக்கப் பட்டவர்கள், | விசாரணை நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு இல்லாததுடன் அவற்றின் தற்போதைக்கான நிலைமையினை கணக்காய்விற்கு முன் வைக்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் ஏற்பாடு களுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | திணைக்கள தலைவர்கள் ஆகியோர் செயற்பட வேண்டும். அவ்வாறாயினும் 14 ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு அதிக காலம் சென்றுள்ள போதிலும் மீளாய்வாண்டு முடியும் வரையிலும் விசாரணைகள் முடிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப் பிரமாணம் 571 | 5,486,600 | வைப்பில் இடப்பட்ட திகதி முதல் ஐந்து வருடங்க்ள கழிந்துள்ள ரூபா 5,486,600 பொது வைப்புக்களுக்கான மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணப் படி செயற்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ள துடன் எதிர்வரும் 02 மாதத்திற்குள் அதற்குரிய பதில் கிடைக்காவிடின் அவ் வைப்புக்கள் பொது வருமானத்தில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணப் படி செயற்பட வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டல்கள் கோவை | | | | |
| i. | 2.14.1 (மேலதிக 35) | 557,320 | ரூபா 500 மில்லியன் மேல் பெறுமதிவாய்ந்த பொருட்கள் மற்றும் சேவைகளினை கொள்வனவு செய்யும் போது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக்கு முவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 வருடம் | 2021 வருடத்தினுள் 1500 கி.மீ நீளமான மின்வேலியினை நிர்மாணித்து முடிக்கப்படுவதற்கான நோக்குடன் பெறுகைச் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதுடன் அதற்கான போட்டியிடும் தன்மை ஊடாக ஆகக்குறைந்த | அரச பெறுகை வழிகாட்டல் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 631,067,014 பெறுமதி வாய்ந்த யானை வேலிக்கான 30 உருப்படிகள் உள்ளிட்ட உபகரணங்களினை கொள்வனவு செய்யும் போது அவற்றினை 07 ஒப்பந்தங்களாக பிரிக்கப்பட்டு 07 சந்தர்ப்பங்களில், 07 முறை விலைமனுக்கள் கோரப்பட்டு திணைக்கள பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதன் காரணமாக விலைமனு கோருவதற்கு புதினப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்கு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு 07 சந்தர்ப்பங்களின் போது பணம் செலுத்த நேரிட்டமையினால் ரூபா 557,320 மேலதிக செலவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | விலையின் கீழ் பொருட்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு இவ்வாறு Lot 7 ஆக பிரிக்கப்பட்டு விலைமனுகோரல் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | |
| ii | 3.9.1 | மக்கள் மைய இயக்கங்களுக்கான நேரடி ஒப்பந்த முறையின் கீழ் சங்கங்கள் மூலம் ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளும் போது திட்டத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதன் பொருட்டு திட்டத்தை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சங்கத்தின் தகுதியினை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 05 ஒப்பந்த வேலைகளுக்கான ஒப்பந்த வேலைகள் வழங்கும் போது தெரிவுக் குழுவினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை | சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரின் தலைமையிலான குழுவினால் இதனை மேற்கொள்ளப் படுவதுடன் அதற்கு பெறுகைக் குழுவை சார்ந்த உறுப்பினர் ஒருவரும் பங்களிப்பினை செய்வார். அக்குழுவின் மூலமாக பொருத்தமான மக்கள் மைய இயக்கத்தினை தெரிவு செய்யப்படும் போது அதனுடன் தொடர்புடைய விடயங்களும் கவனத்தில் கொண்டு தெரிவினை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 வருடத்திற்கான செயற்பாட்டு திட்டத்தின் படி இலக்கிடப்பட்ட 11 காரியங்களுக்காக ரூபா 17,500,000 ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அக்காரியங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 05 திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒரு திட்ட முகாமைத்துவு பரிந்துரையினால் இரத்துச் செய்யப்பட்டது. ஏனைய 05 திட்டங்களும் 2022 வருடத்திற்கான செயற்படு திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படவுள்ளன. | செயற்பாட்டு திட்டத்தின் படி இலக்கிடப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக் கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 வருடம் வனசீவராசிகள் வாழும் 09 வலயங்களில் மின்சார வேலிகள் நிர்மாணிக்கும் பொருட்டு பாதைகள் அமைக்கப்படுவதற்கு மற்றும் மின்சார வேலிகள் நிர்மாணிப்பதற்கு ரூபா 29,322,490 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | காணி தொடர்பான சிக்கல்கள் சில மின்சார வேலைகள் வனபாதுகாப்புத் திணைக்களத்தின் எல்லையில் அமைந்துள்ளமையினால் மற்றும் அத்திணைக்களத்தின் அனுமதியினை கிடைக்காமை, விவசாய இயக்கங்கள் மூலம் இதனை மேற்கொள்ளும் போது மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினைக்கு செய்ய இயலாமை போன்ற காரணிகளினால் இச்செயற்பாடுகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் குறைவாகக் காணப்பட்டது. | செயற்படு திட்டத்தின் படி இலக்கிடப்பட்ட காரியங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு உதவி திட்டங்களின் மூலம் கிடைக்கப் பெறும் சொத்துக்களினை பதிவிடப்படாமையின் ஆபத்தினை 2020 வருட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டியுள்ள போதிலும், 2022 பெப்ரவரி 19 ஆந் திகதி கணக்காய்வின் மூலம் GIZ திட்டத்தின் மூலமாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் படி ரூபா 20,755,328 பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் திணைக்களத்தின் பிரதான களஞ்சிய சாலையின் GIZ பட்டியல் ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. சம்பந்தப்பட்ட உபகரணங்கள் நிறுவனத்தினால் வனசீவராசிகள் திணைக்களத்திற்கு முறையாக கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தரவுகள் கணக்குப் பிரிவு மற்றும் பிரதான களஞ்சிய சாலையில் பதியப்படாமையினால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | GIZ திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் பொருட்கள் முறையாக பிரதான களஞ்சியசாலை ஊடாக வழங்குவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளும் படி திட்டத்திற்கான இணைப்பு உத்தியோகத்தர்களினை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முறையாக பொருட்களுக்கான பட்டியலினை ஏடுகளில் பதியப்படல் வேண்டும். |

### 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள சேதங்கள் மற்றும் நட்டங்களுக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 14,355,383 சேதங்கள் | இதுபற்றி மேற்கொண்டு ஆராய்ந்து பார்த்து 2022 ஒதுக்கல் கணக்கினைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் நட்டங்கள் நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் தள்ளுபடிக்கான கூற்றில் காட்டப்படவில்லை. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 104(3) பிரகாரம் பரிபூரண அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படும் என கருதப்பட்டால் உடனே ஆரம்ப அறிக்கையினை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 10 வாகன விபத்துக்கள் தொடர்பாக விபத்து நடந்து ஒரு வருடத்திற்கும் மேல் கழிந்து விட்டிருந்த போதிலும் தமீளாய்வாண்டு இறுதி வரையும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பரீட்சிப்பு சபையினால் நிதிப்பிரமாணம் 104 படி பரீட்சிப்பினை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இறுதி அறிக்கையினை பெற்றுத்தரும்படி நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்டம் மற்றும் சேதம் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் பரிபூரண அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 17 வாகன விபத்துக்கள் தொடர்பில் விபத்து நடந்து ஒரு வருடத்திற்கும் மேல் கழிந்து விட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் பரிபூரண அறிக்கையினை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நாடு வழமை நிலைமைக்கு திரும்பியவுடன் இந்த பரீட்சிப்பு அலுவல்களினை முடிப்பதற்கான ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முத்துராஜவெல சுற்றாடல் முறைமையில் 1285 ஹெக்டயர் கொண்ட பூமிப் பகுதியினை 1996 இலக்கம் 947/13 கொண்ட வர்த்தமானி மூலம் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டு இறுதி வரையும் அச்சரணாலய எல்லையினை அடையாளமிடுவதற்கு திணைக்களத்திற்கு இயலாது போயுள்ளது. | தற்போது அதற்கான நீதிமன்ற பணிப்பினை நில அளவையாளர் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளபடியால் இவ்வருடத்தினுள் அவ்அலுவல்கள் செய்து முடிக்கப்படும். | சரணாயலத்தின் எல்லைகளினை ஏற்கனவே நிச்சயித்திருந்த படி அடையாளம் இடுவதற்காக செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2020 மற்றும் 2021 வருடங்களினுள் மின்சார வேலிகளினை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தலுக்கான செலவு முறையே ரூபா 257,521,334 மற்றும் ரூபா 714,695,969 ஆனதுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது முழு மின்சார வேலியின் நீள அளவு கி.மீ 4,756 ஆகும். அவ்வாறாயினும் சென்ற 05 ஆண்டுகளினுள் நேர்ந்த யானை மரணங்கள், மனித மரணங்கள் மற்றும் சொத்துக்களுக்கான சேதங்களினை கவனத்திற் கொள்ளும் போது மின்சார வேலிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் மனித-யானை மோதல் குறைந்துள்ளமையினை அவதானிக்க கூடியதாக இல்லை. | காட்டு யானை - மனித மோதல் நிலவும் பிரதேசங்களில் பொருளாதார செயல்பாடுகள் துரிதமாக விருத்தியடைந்துள்ளதுடன் அதன் காரணமாக காட்டு யானைகள் உலாவும் பாதை வழிகளில் முட்டுக் கட்டை ஏற்படுதல் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனங்களுக்கு வெளியில் காட்டு மோதல்களை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் தந்திரோபாயங்கள் முறையான தரத்துடன் செயற்படுத்துவதற்கு முட்டுக்கட்டை ஏற்படுதல் ஆகிய காரணங்களினால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. | யானை மனித மோதலினை குறைப்பதற்கான முறையான தந்திரோபாயங் களினை அறிமுகப்படுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | உடவலவ பிரதேசத்தில் 500 மீற்றர் நீளத்தில் காட்டுயானை உலாவுவதனை | 2021 வருடம் முழுதும் நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமையும் பொருட்களின் விலை | ஒப்பந்தப் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தடுப்பதற்கான தடுப்புத்தாள் தகடு 6,000 விரிப்பதற்காக 2021 மார்ச் 15 ஆந் திகதி ‘ரெடகோ’ நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 90 நாட்களுக்குள் அதாவது 2021 யூன் 15 ஆந் திகதியாகும் போது அலுவல்கள் முடிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் 2022 மார்ச் வரையிலும் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 18,446,000 பெறுமதிவாய்ந்த காட்டுயானை தடுப்புக்கான 4,010 தாள் தகடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக அதிகரித்தமை, மற்றும் தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட கஷ்ட நிலை காரணமாகவும் யானைத் தடுப்பு விரிப்புத்தாள் தகடு தயாரிப்பினை தாமதப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தற்போது REDECO நிறுவனம் அத்தடுப்புத்தகடு தாள்களினை தயாரித்திருந்ததுடன் அவற்றினை உடவலவ பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2021 வருடம், கிலோமீற்றர் 1,500 நீளமான மின்சார வேலி நிர்மாணிப்பதற்கு தேவையான முன் செய் சக்தி வாய்ந்த 194 சிறுகுடில்கள், முன்செய் மலக்கூடம் 385 மற்றும் 3080 கொங்கிறீட், கியூப் கொள்வனவு செய்வதற்காக ரெடிகோ நிறுவனத்துடன் 2021 மார்ச் 15 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி 90 நாட்களுக்குள் அதாவது 2021 யூன் 15 ஆந் திகதி முடிவடைவதற்கு முன்னர் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மார்ச் வரையும் உடன்படிக்கையிடப்பட்ட பெறுமானமுள்ள ரூபா 46,683,426 ஆன முன்செய் 59 வலுக்குடில்கள், 634 கொங்கிறீட் கியூப்கள் மற்றும் 346 முன்செய் மலக்கூடங்கள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்போது குறிப்பிடத்தக்க அளவு தயாரிக்கப்பட்டுள்ள துடன் மின்சார வேலிகள் நிர்மாணிக்கப்படும் இடங்களுக்கு அவற்றினை கொண்டு செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிரேஷ்ட மட்டத்திலான 25 வெற்றிடங்கள் உள்ளிட்ட திணைக்களத்தில் ஒட்டுமொத்த பணிக்குழாமில் 924 வெற்றிடங்கள் இருந்ததுடன் மேலதிக பணிக்குழாம் 45 ஆக இருந்தது. | 54 பயிற்சி பெறம் பட்டதாரிகளினை இத்திணைக்களத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள மையினால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக பணிக் குழாமில் 45 மேலதிக எண்ணிக்கை காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு செயற்பட வேண்டும். |